# நாகை மாவட்டத்தில் 3 தொகுதிகளில் 700 ஓட்டுச்சாவடிகள் அமைப்பு

## பாதுகாப்பு பணியில் 2300 போலீசார்

நாகை, ஏப். 23-

நாகை மாவட்டத்தில் 3 தொகுதிகளில் ஓட்டுப்பதிவு இன்று நடைபெற உள்ளது. துணை ராணுவம் மற்றும் போலீசார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். ஓட்டுப்பதிவு அமைதியாக நடக்க தேர்தல் துறை பல்வேறு முன்னேற்பாடுகளுடன் தயார் நிலையில் உள்ளது.

**700 ஓட்டுச்சாவடிகள்:** மாவட்டத்தில் உள்ள 3 சட்டசபை தொகுதிகளில் 700 ஓட்டுச்சாவடி மையங்கள் உள்ளது. இதில் 53 ஓட்டுச்சாவடிகள் பதட்டமான ஓட்டுச்சாவடிகள் என கண்டறியப் பட்டு, அந்த ஓட்டுச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்துப்பட்டு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஓட்டுச்சாவடி மையங்களிலும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக ஓட்டளிக்கவும், குடிநீர் உள்ளிட்ட அனைத்து வகையான அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

இதேபோல் மாவட்டத்தில் செலவின பார்வையாளர்கள் 3, தேர்தல் நுண் பார்வையாளர்கள் 90, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் 3, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் 6, ஓட்டுச்சாவடி அலுவலர்கள் 18, ஓட்டு எண்ணக்கை மேற்கொள்ளும் அலுவலர்கள் 144, பறக்கம் படை 27 குழுவினர், நிலையான கண்காணிப்புக்குழு 27 குழுவினர், வீடியோ கண்காணிப்பு குழு 6 அமைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிப்பு உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புகார் அளிக்க சிறப்பு எண்:அதே போல் அனைத்து தொகுதிகளிலும் கண்காணிப்பு குழுக்கள் 24 மணி நேரமும் இயங்குகிறது. பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் கலெக்டர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்பாட்டில் உள்ள மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 7034, 1950 மற்றும் கட்டுப்பாட்டு அறையில் செயல்படும் 04365252594, 252595, 252599 ஆகிய தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம். மேலும் பொதுமக்கள் CVIGIL App மூலமும் தேர்தல் தொடர்பான புகார்களை 24 மணி நேரமும் தெரிவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**2,300 போலீசார் பாதுகாப்பு:** தேர்தல் அமைதியாக நடைபெறும் வகையில் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இதேபோல் 3 கம்பெனி துணை ராணுவத்தை சேர்ந்த 300 பேர் பாதுகாப்பு பணியில் ஒவ்வொரு ஓட்டுச்சாவடிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுதவிர சீருடை இல்லாத போலீசாரும் ரோந்து மற்றும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர். நாகை மாவட்டத்தில் ஓட்டுச்சாவடி மையங்கள் கண்காணிக்கப்பட்டு தேர்தல் அமைதியான முறையில் நடைபெற அனைத்து நடவடிக்கைளும் தயார் நிலையில் உள்ளது என்று மாவட்ட தேர்தல் துறை தெரிவித்துள்ளது.



நாகை கலெக்டர் அலுவலகத்திலிருந்து ஓட்டுமிஷின்கள் ஓட்டுச்சாவடிகளுக்கு அனுப்பும் பணியை கலெக்டர் ஆகாஷ் ஆய்வு செய்தார்.

## அக்கி மறைய...

தினம் ஒரு தகவல்

வெயில் காலங்களில் அக்குள், தொடை இடுக்குகள் உள்ளிட்ட இடங்களில் அக்கி ஏற்படும். இதன் காரணமாக கடுமையான எரிச்சல், வலி ஏற்படும். இதற்கு பசும்பாலில் பப்பாளி சாறை கலந்து பூசி வந்தால் விரைவில் அக்கி மறைந்து விடும்.



காமராஜ், திருச்சி மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்(ஓய்வு)

# திருக்கடையூர் கோயிலில் சித்திரை திருவிழா கொடியேற்றம்

மயிலாடுதுறை, ஏப். 23-

திருக்கடையூரில் தருமை ஆதீனத்திற்கு சொந்தமான அபிராமி அம்மன் சமேத அமிர்தகடேஸ்வரர் கோயிலில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு பஞ்சமுக கொடியேற்றம் நடந்தது. இதை முன்னிட்டு விநாயகர், சுப்பிரமணியர், அமிர்தகடேஸ்வரர், அபிராமி அம்மன், சண்டிகேஸ்வரர் சிறப்பு அலங்காரத்தில் கொடி மரம் அருகே எழுந்தருளினர். தொடர்ந்து கட்டளை தம்பிரான் சுவாமிகள் முன்னிலையில் சிறப்பு பூஜைகளுடன் பஞ்சமுக கொடியேற்றப்பட்டது. கோயில் நிர்வாகத்தினர், குருக்கள் மற்றும் திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். இரவு பஞ்சமூர்த்திகள் வீதி உலா நடந்தது..

நாள்தோறும் மலரும் தினமலர் உங்கள் இல்லம் தேடி வர
-: தொடர்புக்கு :-
Cell: 98948 80600
(காலை 10.00 - மாலை 5.00 மணி)
E.mail: circulationdmrtry@gmail.com



திருக்கடையூரில் தருமை ஆதீனத்திற்கு சொந்தமான அபிராமி அம்மன் சமேத அமிர்தகடேஸ்வரர் கோயிலில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு பஞ்சமுக கொடியேற்றம் நடந்தது.

# ஆயத்த ஆடை பூங்கா அமைக்க திமுக அரசு ஒத்துழைக்கவில்லை

## திருப்பூர் உற்பத்தியாளர் சங்கம் குற்றச்சாட்டு

வேதாரண்யம், ஏப். 23-

வேதாரண்யத்தில் ஆயத்தஆடை பூங்கா அமைக்கும் பணிகளை தொடர திமுக அரசு கட்சி ரீதியாக எதிர்த்து பணிகளை தொடர ஒத்துழைக்கவில்லை என்று திருப்பூர் பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் முத்துரெத்தினம் குற்றம் சாட்டி பேசினார்.

**வேதாரண்யத்துக்கு வந்த இச் சங்க தலைவர் முத்துரத்தினம் கூறியதாவது:**

வேதாரண்யம் அருகே ஆயக்காரன் புலத்தில் வேதா ஆயத்த ஆடை பூங்கா அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு, முதல் கட்டப்பணிகள் 2019–2020ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக வேதாரண்யம், ஆயக்காரன்புலம், வாய்மேடு உட்பட 4 இடங்களில் தனியார் கட்டடத்தில் ஆயத்த ஆடை தயாரிப்பை தொடங்கினோம். இப்போது அந்த நிறுவனங்களில் சுமார் 500க்கும் அதிகமான பெண்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஆட்சி மாற்றத்தால் முழுமையான ஆடை தயாரிப்பு பணிகள் தொடர தாமதம் ஏற்பட்டது.

இன்னும் சில மாதங்களில் பெயர் மாற்றம் ஏற்பட்டாலும் ஆயத்தஆடை தொழில் விரைந்து செயல்படுத்த எங்களது சங்கத்தில் உள்ள 1600 உற்பத்தியாளர்களும் ஆர்வமாக உள்ளனர் என்று சங்கத் தலைவர் முத்துரத்தினம் தெரிவித்தார்.

அவருடன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்க பொருளாளர் சுபாஷ், செயற்குழு ரஞ்சித் உட்பட உற்பத்தியாளர்களும் இருந்தனர்.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

திருவாரூர் கிளை
நெ.85, தெற்கு மெயின் தெரு, திருவாரூர் - 610 001
போன் : 04366-240093, Email: tirutn@bankofbaroda.bank.in, Web: www.bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு**

பிற்சேர்க்கை IV-Aயின்படி ( விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.**

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : 1) திரு. S.பாலகிருஷ்ணன் த/பெ. சிவசங்கரன், மனை எண் 3, ஸ்டார் சிட்டி நகர், தியாணபுரம், திருவாரூர் - 610001. 2) திருமதி.சீத்தலாதேவி, க/பெ. S.பாலகிருஷ்ணன், மனை எண் 3, ஸ்டார் சிட்டி நகர், தியாணபுரம், திருவாரூர் - 610001.**

Loan A/c.No.**33410600002762**, நிலுவை தொகை ரூ.**55,94,997.98/-** மேலும் **19.04.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

**அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்**

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், திருவாரூர் சார்பதிவு, திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலை ஊராட்சி, தண்டலை வருவாய் கிராமம், தியானபுரம் குக்கிராமத்தில் அமைந்துள்ள ஸ்டார் சிட்டி நகர் மனைப்பிரிவு. 1) ரீசர்வே நெ. 291-2A, மொத்தப் பரப்பளவில் ஹேக்டர் 0.40.5ல் நஞ்சைப்பகுதியின் பரப்பளவு 33.44 சதுரமீட்டர் (360 சதுரடி) (புதிய உட்பிரிவின் படி புதிய ரீசர்வே நெ. 291-9). 2) ரீசர்வே நெ. 291-2B, மொத்தப் பரப்பளவில் ஹேக்டர் 0.06.0ல் நஞ்சைப்பகுதியின் பரப்பளவு 115.01 சதுரமீட்டர் (1238 சதுரடி) (புதிய உட்பிரிவின் படி புதிய ரீசர்வே நெ. 291-2B2). ஆக மொத்தம் 148.45 சதுர மீட்டர் ( 1598 சதுரஅடி). 1358 சதுரடியில் மனை எண். 3ல் புதிதாக கட்டப்பட்ட RCC வீடு உட்பட. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் 30 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 54அடி, மேற்கு பக்கம் 52½ அடி. **நான்கு எல்லைகள்:** 30 அடி கிழக்கு மேற்கு சாலைக்கு தெற்கு, ரீசர்வே நெ. 291-3 இடத்திற்கு வடக்கு. மனை எண் 4க்கு கிழக்கு, மனை எண் 2க்கு மேற்கு.

**சுவாதீனநிலை : ஆக்கப்பூர்வமான**

| நிர்ணயிக்கப்பட்ட விலை | டேவணித் தொகை | ஏல உயர்வு தொகை |
|---|---|---|
| ரூ. 27,00,000/- | ரூ. 2,70,000/- | ரூ. 25,000/- |

மின் ஏல தேதி மற்றும் நேரம் **01.06.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

**சொத்தினை பார்வையிடும் தேதி : 05.05.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)**
**டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்:** 31.05.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction மற்றும் Baanknet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9032872524 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 22.04.2026
இடம் : திருவாரூர்

**அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர் / பேங்க் ஆஃப் பரோடா**

# திருவாரூர் மாவட்டத்தில் 1,271 ஓட்டுச்சாவடிகள் அமைப்பு

## கண்காணிப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள் தயார் நிலை

திருவாரூர், ஏப். 23-

திருவாரூர் திருவிக அரசு கலைக்கல்லூரி ஓட்டு எண்ணும் மையத்தில் 4 சட்டசபை தொகுதிகளிலும் தேர்தல் முடிவுற்று மின்னணு ஓட்டுப்பதிவு மிஷின்கள் வைக்கப்பட உள்ளன.

இந்நிலையில் இங்குள்ள ஓட்டு மிஷின்கள் வைப்பறை மற்றும் ஓட்டு எண்ணும் அறைகளை திருவாரூர் மற்றும் நன்னிலம் தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் அஜய்யாதவ், திருத்துறைப்பூண்டி மற்றும் மன்னார்குடி தேர்தல் பொது பார்வையாளர் அனுபமா, பொது காவல் பார்வையாளர் ஆஷிஷ்., மாவட்ட தேர்தல் அலுவலர் மோகனசந்திரன் ஆகியோர் பார்வையிட்டனர்.

திருவாரூர் மாவட்டத்தில் ஓட்டு பதிவிற்காக திருத்துறைப்பூண்டி (தனி), சட்டசபை தொகுதிக்கு கட்டுப்பாட்டுக் கருவிகள், ஓட்டுப்பதிவு மிஷின்கள் தலா 351, மற்றும் விவிபாட் – 380, மன்னார்குடிக்கு தொகுதிக்கு கட்டுப்பாட்டுக் கருவிகள், ஓட்டுப்பதிவு மிஷின்கள் தலா 368, மற்றும் விவிபாட் – 399, திருவாரூர் சட்டசபை தொகுதிக்கு கட்டுப்பாட்டுக் கருவிகள், ஓட்டுப் பதிவு மிஷின்கள் 392, மற்றும் விவிபாட் – 425, நன்னிலம் தொகுதிக்கு கட்டுப்பாட்டுக் கருவிகள், ஓட்டுப்பதிவு மிஷின்கள் 412, மற்றும் விவிபாட் – 447 ஆகியன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஓட்டுப்பதிவு நடக்கும் 4 சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட ஆயிரத்து 271 ஓட்டு சாவடிகளிலும் 2 ஆயிரத்து 542 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஓட்டு எண்ணும் திருவிக கல்லூரி மையமும் கண்காணிப்பு கேமராக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. கல்லூரியை சுற்றிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். கல்லூரி உள்ளே, வெளியே போலீஸ் கண்காணிப்பு டவர்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF AT KARAIKAL
**O.S.NO: 21 /2026**

1. Avilarani Therasammal — Plaintiffs
Vs
Sundara Pandian — Defendant

அறிவிப்பு

மேற்கொண்ட அசல் வழக்கினை வாதி தாக்கல் செய்து கண்ணிகோயில் தெரு, வீடு எண். 25, விழித்தியூர், காரைக்கால் பகுதியில் வசித்து வந்த சபாபதி அவர்களின் மகன் கோவிந்தசாமி கடந்த 05.10.2025 அன்று காலமானவருக்கு தான் மட்டும் வாரிசு என்று பிரகடனப்படுத்த செய்யுமாறு கோரி இருக்கிறார்கள். மேற்கொண்ட வழக்கு வரும் 05.06.2026 அன்று காலை மணி 10க்கு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. ஆட்சேபனை உள்ளவர்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம்.

H. உமர் பாரூக், வாதிகளின் வழக்கறிஞர்.

திருவாரூர் டி.மு. கோர்ட்டாரவர்கள் சமூகத்திற்கு
**E.P. 58/2025 in அ.வ.எண். 2/2023**

K. நடராஜன் — மனுதாரர்/வாதி
/எதிர்/
திருவாரூர் தாலுக்கா திருவாரூர் டி.மு. இலாக்கா தண்டலை அஞ்சல் விளமல் ராஜகணபதி நகர், வினாயகா சூப்பர்மார்க்கெட் காலனியில் இருந்து வரும் தட்சிணாமூர்த்தி குமாரர் முருகேசன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மேற்படி எதிர்மனுதாரர்/பிரதிவாதி என்பவருக்கு

தாங்கள் திருவாரூர் தாலுக்கா திருவாரூர்நகரம் திருவாரூர்புதுதெருவில் இருந்து வரும் கருப்பண்ண கவுண்டர் குமாரர் K. நடராஜன் அவர்களிடம் பிராமிசரி நோட்டின்படி 16.08.2020ல் பெற்ற கடன் தொகை ரூ.75,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து ஆயிரத்) தை திரும்ப செலுத்தாததினால் தங்கள் மீது இந்த நம்பரில் தாவா தொடர்ந்து அதில் ஏற்பட்ட தீர்ப்பின்படி தொகை வசூலிக்க இந்த நம்பரில் EP 58/25ல் நிறைவேற்று மனு கொடுக்கப்பட்டு தங்களுக்கு அறிவிப்பு சென்றதில் தாங்கள் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் இருந்து வருவதால் அறிவிப்பை தங்கள் முகவரியில் ஒட்டி சர்வ் செய்யவும், தினசரி வெளியாகும் செய்திதாளில் விளம்பரம் செய்ய உத்தரவாகி வழக்கு 30.04.26ல் போடப்பட்டு இருப்பதால் ஆட்சேபனை இருந்தால் மேற்படி தேதியில் மேற்படி கோர்ட்டில் காலை 10 மணிக்கு ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம். தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

S.R.அய்யப்பன், வழக்கறிஞர்.

# மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதியில் ஓட்டுப்பதிவு முன்ஏற்பாடுகள் தயார்

மயிலாடுதுறை, ஏப். 23-

மயிலாடுதுறை தொகுதிக்கு மயிலாடுதுறை ஆர்டிஓ அலுவலகத்திலிருந்து ஓட்டுச்சாவடி மையங்களுக்கு வாகனங்கள் மூலம் ஓட்டுப்பதிவு மிஷின்கள் அனுப்பும் பணி நடந்தது.

தேர்தல் நடத்தும் அலுவலர் விஷ்ணுபிரியா தலைமையில் 30 மண்டலங்களுக்கு உட்பட்ட 304 ஓட்டுச்சாவடி மையங்களுக்கு ஓட்டுப்பதிவு மிஷின்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ஓட்டுப் பதிவு மிஷின்கள் 30 வாகனங்கள் மூலம் போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டது.

பூம்புகார் தொகுதிக்கு தரங்கம்பாடி தாசில்தார் அலுவலகத்திலிருந்து தேர்தல் நடத்தும் அலுவலர் கீதா தலைமையில் 34 மண்டலங்களுக்கு உட்பட்ட 342 ஓட்டுச்சாவடி மையங்களுக்கு ஓட்டுப்பதிவு மிஷின்கள் வாகனங்கள் மூலம் போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டது.

மேன்மைமிகு கடலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
**I.A. No. 1/2022 in I.A.No.4/2025 in I.A.No.5/2025 in O.S.172/2020**

தனலட்சுமி, க/பெ. கிருஷ்ணமூர்த்தி, புலியூர் கிராமம், குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர் மாவட்டம். ...மனுதாரர்/வாதி
எதிர்
சுதா, க/பெ.உதயகுமார், No:1/62, மாதா கோவில் தெரு , வைத்தியன் பேட்டை, மயிலாடுதுறை திருவாளபுத்தூர், நாகப்பட்டினம்-609 005 ...8ம் எதிர்மனுதாரர்

8ம் எதிர்மனுதாரருக்கு கொடுக்கும் நோட்டீஸ்

இந்த வழக்கில் இறந்த 1ம் பிரதிவாதி ராமர் படையாட்சிக்கு உங்களை வாரிசாக சேர்க்க கொடுத்த மனுவில் செக்ஷன் 5-ன்படி கொடுத்த I.A.No.1/2022 Abatement ரத்து மனு 1.A.4/2025 மற்றும் வாரிசு மனு I.A.No.5/2025 மனுக்களில் 8ம் எதிர் மனுதாரராக சேர்க்கப்பட்டிருக்கும் உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் **10.06.2026** அன்று காலை 10.00 மணிக்கு கோர்ட்டில் ஆஜராகி தெரிவிக்கவும் தவறினால் Exparte உத்தரவாகும் என்பதை அறியவும்.

M.KUMARAPANDIAN, M.A.,B.L., Advocate, Cuddalore.



சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோயில் அக்ஷர்தம் உணவகம் மற்றும் ஏபிஎம் டிரஸ்ட் சார்பில் பாதயாத்திரையாக கோயிலுக்கு வந்த பக்தர்களுக்கு மசாலா டீ, பால், உணவு பொட்டலங்கள், வாட்டர் பாட்டில்கள் உணவக உரிமையாளர் ஜெயக்குமார் தலைமையில் வழங்கப்பட்டது.

